

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.8.2025) முகாம் அலுவலகத்தில், ஈரோடு மாநகராட்சி, சம்பத் நகர் பூங்காவில் நிறுவப்பட்டுள்ள மூத்த தலைவர் ஈ.வி.கே. சம்பத் மற்றும் சுதந்திர போராட்ட வீரர் தியாகி குமரன் ஆகியோரின் திருவுருவ வெண்கலச் சிலைகளை காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், ஈரோடு தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான சு.முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.இ. பிரகாஷ், அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் சந்திரகுமார், ஏ.ஜி. வெங்கடாசலம், ஈரோடு மாவட்ட கழகச் செயலாளர்கள் தோப்பு வெங்கடாசலம், நல்லசிவம், ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி நாகரத்தினம், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் தனது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கம்!

# 20 இலட்சத்து 59 ஆயிரம் மாணவர்கள் பசியாறுவார்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஆக.25-**

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை நாளை (26ஆம் தேதி) சென்னை மயிலாப்பூர் புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்க உள்ளதையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் "காலை உணவுத் திட்டத்தில்" இனி 20 இலட்சத்து 59 ஆயிரம் மாணவர்கள் பசியாறுவார்கள் என பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து முதல்வர் அவர்கள் விடுத்துள்ள பதிவு வருமாறு:-

காலை உணவுத் திட்டத்தில், இனி 20 இலட்சத்து 59 ஆயிரம் மாணவர்கள் பசியாறுவார்கள்!

நீதிக்கட்சி முதல் நமது திராவிட மாடல் அரசு வரை பள்ளிக் குழந்தைகளுக்கு உணவளித்து வயிற்றுப் பசியைப் போக்கி, அறிவுப்பசிக்குக் கல்வி வழங்குகிறோம்.

இது உணவு மட்டுமல்ல; உயர்வுக்கான உரம்!

நாளை 26.08.2025 அன்று நகர்ப்புறங்களிலுள்ள அரசு உதவி பெறும் பள்ளி களுக்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்கிறோம்.

நாட்டுக்கே முன்னோடியாகத் திகழும் நமது பணிகள் தொடரும்! தமிழ்நாடு நாளும் உயரும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது பதிவில் தெரிவித்துள்ளார்.



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆலந்தூர் ஏ.ஜெ.எஸ் நிதி மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்தார். அருகில் மண்டலக் குழுத் தலைவர் என்.சந்திரன், ஆலந்தூர் வடக்கு பகுதிச் செயலாளர் ப.குணாளன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாமன்ற உறுப்பினர் ரேணுகா சீனிவாசன், வட்டச் செயலாளர் கே.பி.முரளிகிருஷ்ணன், ஜெ.நடராஜன், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் வரி விதிப்பு மிகவும் குறைவு!

## அமைச்சர் கே.என்.நேரு கோவையில் பேட்டி!

கோவை, ஆக.25-

காந்திபுரம் பகுதியில் செம்மொழி பூங்கா நடைபெறும் பணிகளை பார்வையிட்டு, ஆய்வு செய்த அமைச்சர் கே.என்.நேரு, பின்னர் செய்தியாளர்களை சந்திக்கையில்,

செம்மொழி பூங்கா முழுமையாக முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்காக, முதலமைச்சரின் அறிவுரையை ஏற்று செம்மொழிப் பூங்கா பார்வையிடப்பட்டதாகவும், ஆணையர் அறிவித்தபடி தொகைக்கு மேல் ரூபாய் 50 கோடி மேல் செலவு செய்ய வேண்டும் என குறிப்பிட்டு இருந்தார்.

முதல்வரின் அனுமதியை பெற்று அந்த நிதியை கொடுத்து பணிகளை முடிக்கக் கூடிய நடவடிக்கைகளை எடுப்பதற்கான பார்வையிட வந்ததாகவும், ஆர்.எஸ் புரம் மாதிரி பள்ளியில் 2.92 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட மாணவர் விடுதி, மற்றும் 1.96 கோடி கட்டப்பட்ட வகுப்பறைகள் திறந்த வைத்து, சர்வதேச அளவில் அமைக்கப்பட்டு வரும் ஹாக்கி மைதானத்தை ஆய்வு செய்து பணிகளைப் பார்வையிட்டு விரைந்து முடிக்க நடவடிக்கை எடுப்பதற்காகவும்,

கவுண்டம்பாளையம் பகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை விரைந்து முடிக்க ஆய்வு செய்வதாகவும், குப்பை மாற்று நிலையத்தினை ஆய்வு மேற்கொண்டு அதேபோன்று உக்கடம் பேருந்து நிலையத்தில் 21.55 கோடி மதிப்பீட்டில் நவீன முறையில் புதுப்பித்தல் பணிகள் துவக்கவும், பாலக்காடு சாலை போத்தனூர் ரயில் நிலையம் அருகில் மாநகராட்சிக்கான குறிச்சி, குனியமுத்தூர் குடிநீர் திட்டம், பாதாள சாக்கடை திட்டப் பணிகளை ஆய்வு செய்ய உள்ளதாகவும்,

வெள்ளலூர் குப்பைக் கிடங்கு வளாகத்தில் 69.20 கோடி மதிப்பீட்டில் இயற்கை எரிவாயு மையம் பணிகள் துவக்குவதற்காக கோவை வந்ததாகவும் கூறியவர், தொடர்ந்து இந்த பணிகளை மேற்கொண்டு சட்டமன்றத்தில் அறிவித்ததும், தமிழக முதல்வர் நேரடியாக வந்து அறிவித்த பணிகளையும் விரைந்து முடிப்பதற்காக துறையினுடைய அதிகாரிகள் அனைவரும் இங்கு வந்து உள்ளதாகவும், மாவட்ட ஆட்சியர் மொத்த அதிகாரிகளோடு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வந்ததாகவும் தெரிவித்தவர்,

வெள்ளலூர் குப்பை கிடங்கில் நிலத்தடி நீர் மாசு அடைவதை தொடர்ந்து பயோமெட்ரிக் முறையில் 69.20 கோடி மதிப்பீட்டில் இயற்கை எரிவாயு மையம் அமைக்கும் பணிகள் இன்று துவக்கி வைப்பதாகவும், அதே போன்று கோவையில் வேஸ்ட் எனர்ஜி திட்டத்தையும் 250 கோடி மதிப்பில் திட்டத்தையும் துவக்கி வைப்பதாகவும், பிளாஸ்டிக் கழிவுகளில் மின்சாரமாக மாற்றி மக்களுக்கு கொடுக்கின்ற பணிகளை துவங்க உள்ளதாகவும் மீதமுள்ள



மக்கும் குப்பைகளை உரமாக்கி திட்டத்தை சென்னையில் துவங்கி உள்ளதாகவும், அடுத்தபடியாக கோவை மதுரையில் துவங்க இருப்பதாக கூறினார்.

திருச்சி, குனியமுத்தூர் பகுதிகளில் தற்பொழுது பாதாள சாக்கடை திட்டப் பணிகள் நடைபெற்று வருவதாகவும், அது முடிவுற்ற பின்னர் மற்ற பகுதிகளில் பணிகள் முடிய ஆறு மாத காலம் ஆகும் என்றும், ஒவ்வொரு பகுதிகளிலும் ஒவ்வொரு மாதிரியாக சவால்கள் உள்ளதாகவும், ஒவ்வொரு வீடுகளுக்கு இணைப்புகள் வழங்குவதில் பல்வேறு தடங்கல்கள் உள்ளதாகவும், 6 மாதத்திற்குள் பணிகள் முடிவடையும் என்றார்.

கோவை மாவட்டத்தில் வரிவிதிப்பு அதிகமாக உள்ளது என்ற கேள்விக்கு, "யாருக்கு அதிகம் ? யாருக்கு அதிகமாக உள்ளது ? யாருக்கு தவறு செய்து உள்ளார்கள் என உரிய முறையில் கூறுங்கள் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

சட்டமன்றத்திலே மற்ற மாநிலங்கள் காட்டிலும் கேரளா, மகாராஷ்டிரா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் காட்டிலும், மகாராஷ்டிராவில் 14,000 வரிகள் விதித்தால் தமிழகத்தில் 2,000 தான் என்றும் சட்டமன்றத்தில் சட்டம் நிறைவேற்றி உள்ளதாகவும், ஒவ்வொரு முறையும் வரி விதிப்பு பிரச்சனை வரக் கூடாது என்பதற்காக சட்டம் நிறைவேற்றியதாகவும், 600 சதுர அடிக்கு கீழ் உள்ள இடங்களுக்கு எந்த மாற்றமும் இல்லை என்றும் ஏழைகள் இருக்கும் இடம் என்றவர், 600 சதுர அடிக்கு மேல் உள்ள இடங்களுக்கு வரி விதித்ததாகவும் அதனை முதல்வர் மேலும் வரி விதிக்க வேண்டாம் என்றும் கூறியதாகவும் கூறியவர், குப்பை வரி, சொத்து வரி கூடுதலாக வருவதற்கு வாய்ப்பு கிடையாது என்றார்.

ஏற்கனவே போடப்பட்ட வரி குறைவாக இருக்கும் என்றால் 2,400 சதுர அடியில், 1,200 சதுர அடி கட்டிடம் கட்டினால் மீதமுள்ள இடங்களுக்கு வரி போடாமல் இருக்க முடியுமா ? அதுபோன்று இருக்கும் இடங்களை ட்ரோன் சர்வே மூலம் கண்டறியப்பட்டதாகவும், அதனையும் முதல்வர் ட்ரோன் சர்வே எடுக்க வேண்டாம் என கூறியதாகவும் தெரிவித்தவர், வரியும் எங்கேயும் உயர்த்தப்படவில்லை அப்படி ஏதாவது? குறிப்பிட்டு கூறினால் திருத்திக் கொள்ளலாம் என்றார்.


